CNR NO: TNTH13-006800-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04-ஆம் நாள் செவ்வாய்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 744/2023

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
போடி நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.51/2023. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1).மணி (வயது 64/2026),
த/பெ.சுந்ததேவர்.

2).பெரியசாமி (வயது 67/2026),
த/பெ.வீரணத்தேவர்.

3).ஞானவேல்ராஜ் (எ) ஞானவேல் (வயது 45/2026),
த/பெ.சுப்ரமணியன்.

4).நிவேந்திரன் (எ) நிவேதன் (வயது 28/2026),
த/பெ.முத்தையா. ..... எதிரிகள்

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ.எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>போடி நகர் காவல்நிலையம். | எதிரி:<br>1).மணி,<br>2).பெரியசாமி,<br>3).ஞானவேல்ராஜ் (எ) ஞானவேல்,<br>4).நிவேந்திரன் (எ) நிவேதன். |
| 2. | எதிரிகளின் வயது | 1).64/2026,<br>2).67/2026,<br>3).45/2026,<br>4).28/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | 1).த/பெ.சுந்ததேவர்,<br>2).த/பெ.வீரணத்தேவர்<br>3).த/பெ.சுப்ரமணியன்,<br>4).த/பெ.முத்தையா. |
| 4. | மதம் | 1 முதல் 4 எதிரிகள் – இந்து. |
| 5. | தொழில் | 1, 2 மற்றும் 4 எதிரிகள் – விவசாயம். |
| | | 3-வது எதிரி – தொழிலதிபர். |
| 6. | முகவரி | 1-வது எதிரி – குரங்கணி ரோடு, முந்தல், போடிநாயக்கனூர். |
| | | 2-வது எதிரி - 22-வது வார்டு, வாமணன் தெரு, குலாளர்பாளையம், போடிநாயக்கனூர். |
| | | 3-வது எதிரி – பெரியாண்டவர்புரம் லேன், போடிநாயக்கனூர். |
| | | 4-வது எதிரி – கிழக்கு வெளி வீதி, போடிநாயக்கனூர். |

<table>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td colspan="12">1 முதல் 4 எதிரிகள் – போடிநாயக்கனூர், தேனி.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td colspan="12">22.02.2023.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td colspan="12">1 முதல் 4 எதிரிகள் – 29.03.2023.</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td colspan="12">1 முதல் 4 எதிரிகளுக்கு – 29.03.2023 (காவல்நிலையப் பிணை).</td></tr>
<tr><td>11.</td><td>எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள்</td><td colspan="12">1 முதல் 4 எதிரிகளுக்கு – இல்லை.</td></tr>
<tr><td>12.</td><td>இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="12">15.06.2023.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="12">26.07.2023.</td></tr>
<tr><td>14.</td><td>கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="12">20.09.2023.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="12">05.10.2023.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="12">07.11.2023.</td></tr>
<tr><td rowspan="5">17.</td><td rowspan="5">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td colspan="4">Witness</td><td colspan="4">Chief</td><td colspan="4">Cross</td></tr>
<tr><td colspan="4">PW1</td><td colspan="4">29.01.2024</td><td colspan="4">16.04.2025</td></tr>
<tr><td colspan="4">PW2</td><td colspan="4">12.02.2024</td><td colspan="4">12.02.2024</td></tr>
<tr><td colspan="4">PW3</td><td colspan="4">12.02.2024</td><td colspan="4">12.02.2024</td></tr>
<tr><td colspan="4">PW4</td><td colspan="4">02.07.2026</td><td colspan="4">02.07.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="12">20.07.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="12">04.07.2026.</td></tr>
<tr><td rowspan="2">20.</td><td rowspan="2">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Date</td><td colspan="3">U/s</td><td colspan="3">Cr.M.P. No.</td><td colspan="3">Result</td></tr>
<tr><td colspan="3">23.02.2024</td><td colspan="3">311 of Cr.P.C</td><td colspan="3">1243/2024</td><td colspan="3">Allowed</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 21. | தீர்ப்பு விவரம் | விடுதலை. |
| 23. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | இல்லை. |
| 24. | தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் | இல்லை. |
| 25. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 26. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 27. | காலதாமதத்திற்கான காரணம் | எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு சாட்சிகளை காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்தது. |

*****

இவ்வழக்கு 26.07.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 20.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.V.கணேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவு 4A(1b) தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டம் 1959-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **<u>இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு</u>**:

கடந்த 22.02.2023-ஆம் தேதி, 09.00 மணிக்கு, போடி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.மணிகண்டன் போலீஸ் பார்ட்டியுடன் போடி, தேவர்சிலை அருகில் ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது, அம்மா மக்கள் முன்னேற்ற கழக கட்சியின் போடி நகரத்தில் பொறுப்பு வகிக்கும் 1-வது எதிரி மணி, 2-வது எதிரி பெரியசாமி, 3-வது எதிரி S.V.S.ஞானவேல், 4-வது எதிரி நிவேந்திரன் (எ) நிவேதன் ஆகியோர்கள் எவ்விதமான அரசு அனுமதியுமின்றி, பொது இடத்தில் அவர்கள் சார்ந்த கட்சியின் சார்பாக, முன்னாள் முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக பிளக்ஸ் பேனர் வைத்து நகரில் அழகு சீர்குலைவை ஏற்படுத்திய குற்றத்திற்காக, எதிரிகள் மீது 4A(1b) தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டத்தின் கீழ் அரசுத்தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் பிரிவின் கீழ் 20.09.2023-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது முகாந்திரம் எழுந்ததால், 05.10.2023-ஆம் தேதியன்று எதிரிகள் மீது 4A(1b) தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என்று கூறினர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு:**

5.1). அ.சா.1 முதல்நிலை காவலர் திரு.வீரமுத்து சாட்சியத்தில், கடந்த 22.02.2023-ஆம் தேதி சார்பு ஆய்வாளர் மணிகண்டன் மற்றும் முதல்நிலை காவலர் - 805 பால்பாண்டியன் என்பவருடன் சட்ட ஒழுங்கு சம்பந்தமாக போடி தேவர் சிலை அருகே ரோந்து சென்றிருந்தபோது, போடி தேவர் சிலை அருகில், அ.ம.மு.க கட்சியை சேர்ந்த பிளக்ஸ் பேனரை பார்த்ததாகவும், முன்னாள் முதல்வர் செல்வி.ஜெயலலிதா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பிளக்ஸ் பேனர் வைத்திருந்ததாகவும், மேற்படி பிளக்ஸ் பேனரை யார் வைத்திருந்தார்கள் என்று விசாரித்தபோது, முந்தலை சேர்ந்த சுந்தத்தேவர் மகன் மணி மற்றும் போடி வாமனன் தெருவை சேர்ந்த வீரணன் மகன் பெரியசாமி, பெரியாண்டவர் கோவில் தெருவை சேர்ந்த எஸ்.எஸ்.ஞானவேல், கிழக்கு ராஜவீதியை சேர்ந்த முத்தையா மகன் நிவேந்திரன் (எ) நிவேதன் மற்றும் தர்மர் ஆகியோர்கள் பிளக்ஸ் பேனரை வைத்திருந்தது தெரிய வந்ததாகவும், இது சம்பந்தமாக மேற்படி பிளக்ஸ் பேனரை அரசு அனுமதியின்றி வைத்திருந்ததால் சார்பு ஆய்வாளர் குற்ற எண்.51/2023 என்கிற வழக்கு பதிவு செய்ததாகவும், அவருக்கு தான் உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.2). அ.சா.2 முதல்நிலை காவலர் திரு.பால்பாண்டியன் சாட்சியத்தில், கடந்த 22.02.2023-ஆம் தேதி, காலை 09.00 மணியளவில், குற்றம் மற்றும் சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக தானும், சார்பு ஆய்வாளர் மணிகண்டன், முதல்நிலை காவலர் - 323 வீரமுத்து

என்பவரும் ரோந்து சென்றபோது, போடி நகர் தேவர் சிலை அருகே, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ப்ளக்ஸ் பேனர் எவ்வித அனுமதியும் இன்றி, நகர் அழகு சீர்குலைவு ஏற்படுத்தும் அளவில் வைக்கப்பட்டிருந்ததாகவும், விசாரித்ததில், போடி முந்தலை சேர்ந்த மணி, ஞானவேல், பெரியசாமி, நிவேதன் மற்றும் தர்மர் ஆகியோர்கள் வைத்தாக தகவல் கிடைத்ததாகவும், இது சம்பந்தமாக நிலையம் சென்று, காலை 10.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள், எதிரிகள் மீது TNOPPDL Act வழக்கு பதிவு செய்ய தான் உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.3). அ.சா.3 சார்பு ஆய்வாளர் திரு.மணிகண்டன் சாட்சியத்தில், கடந்த 2023-ஆம் ஆண்டு, போடி நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 22.02.2023-ஆம் தேதி, காலை 09.00 மணிக்கு, போடி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராகிய தான், முதல்நிலை காவலர் - 323 வீரமுத்து, 805 பால்பாண்டியன் ஆகியோர்கள் போடி நகர் பகுதியில் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகாக ரோந்து அலுவல் செய்து வரும்போது, பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட அ.ம.மு.க கட்சியை சேர்ந்தவர்களான போடி நகர செயலாளர் மணி, பெரியசாமி, தர்மர், எஸ்விஎஸ் ஞானவேல், நிவேந்திரன் மற்றும் அக்கட்சியை சேர்ந்த சிலரும், முன்னாள் முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக, போடிதேவர் சிலைக்கு அருகில், எந்தவித அரசு அனுமதியும் இன்றி பிளக்ஸ் பேனர் வைத்து, அழகு சீர்குலைவு ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.4). மேற்படி அ.சா.3 சார்பு ஆய்வாளர் திரு.மணிகண்டன் சாட்சியத்தில், அதன்பின் நிலையம் வந்து, போடி நகர் காவல்நிலைய குற்ற எண்.51/2023, பிரிவுகள் 4 (A-1a) TNOPPDL Act-ன் பிரகாரம் வழக்கு பதிவு செய்ததாகவும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1** என்றும், சாட்சிகளை தனித்தனியே விசாரித்து, கு.வி.மு.ச பிரிவு 161(3)-ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு புலன் விசாரணையில் தர்மர் மற்றும் சிலர்

சம்பந்தப்படவில்லை என்ற தெரிந்து, பெயர் நீக்கம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை செய்ததாகவும், **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.2** என்றும், பின்னர் தான் பணிமாறுதலில் சென்றதால் காவல்நிலைய அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டு சென்றேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.5). அ.சா.4 காவல் ஆய்வாளர் திரு.அசோக் சாட்சியத்தில், கடந்த 29.03.2023-ஆம் தேதி, போடி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தனக்கு முன்பாக பணியில் இருந்த சார்பு ஆய்வாளர் மணிகண்டன் பதிவு செய்த போடி நகர் காவல்நிலைய குற்ற எண்.51/2023, தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் (தடைச்சட்டம்) 1959, பிரிவு 4A(1b)-ன் கீழ் வழக்கு பதிவு செய்திருந்த வழக்கு கோப்பினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சாட்சிகள் வீரமுத்து, பால்பாண்டி ஆகியோர்களை விசாரித்து, சார்பு ஆய்வாளரிடம் சொன்ன விவரங்களையே தன்னிடமும் கூறியதால், தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.6). மேற்படி அ.சா.4 காவல் ஆய்வாளர் திரு.அசோக் சாட்சியத்தில், மேற்கண்ட வழக்கில் புலன் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கையில், பெயர் பதிவு செய்யப்பட்ட எதிரிகளில் நீக்கம் செய்யப்பட்ட தர்மர் என்ற எதிரியைத் தவிர, மற்ற எதிரிகளான மணி, பெரியசாமி, எஸ்.வி.எஸ் ஞானவேல், நிவேந்திரன் (எ) நிவேதன் ஆகியோரை நிலையத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு ஆஜரானவர்களை கைது செய்து, நிலைய பிணையில் விடுவித்து, மேலும், வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து, 29.03.2023-ஆம் தேதி, தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் (தடைச்சட்டம்) 1959 பிரிவு 4A(1b)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(b) பிரிவின் கீழ் 04.07.2026-ஆம் தேதி வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினர். பின்னர், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7). அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுத்தரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

8). எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இடம்பெறவில்லை என்று வாதிட்டார். மேலும், அரசுத்தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் எதிரிகளை விடுதலை செய்யுமாறு கோரி வாதிட்டார்.

9).**தீர்விற்குரிய பிரச்சினை**:

இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின் எதிரிகள் மீது 4A(1b) தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

10.1). கடந்த 22.02.2023-ஆம் தேதி, எதிரிகள் போடிநாயக்கனூர் பேருந்து நிலையம் எதிரே உள்ள தேவர்சிலை அருகில், பொது இடத்தில் அரசு அனுமதி இன்றி அவர்கள் சார்ந்த கட்சியின் சார்பாக பிளக்ஸ் பேனர் வைத்து நகரின் அழகிற்கு சீர்குலைவை ஏற்படுத்தியதாக அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்கையில்,

10.2). அ.சா.1 வீரமுத்து தனது முதல் விசாரணையில், "**சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக போடி தேவர்சிலை அருகே சென்று இருந்தோம். தேவர்சிலை அருகில் அ.ம.மு.க கட்சியைச் சேர்ந்த பிளக்ஸ் பேனரை பார்த்தேன். பிளக்ஸ் பேனரை மணி, பெரியசாமி, ஞானவேல், நிவேதன் ஆகியோர் வைத்திருந்தது தெரிய வந்தது. அரசு அனுமதி இன்றி வைத்திருந்ததால் சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் உதவியாக இருந்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.3). மேலும், இது குறித்து அ.சா.2 பால்பாண்டியன் தனது முதல் விசாரணையில், "**போடி தேவர்சிலை அருகே மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பிளக்ஸ் பேனர் எவ்வித அனுமதியும் இன்றி நகர் அழகை சீர்குலைவு ஏற்படுத்தும் அளவில் வைக்கப்பட்டு இருந்தது. விசாரித்ததில், மணி, ஞானவேல், பெரியசாமி, நிவேதன் மற்றும் தர்மர் ஆகியோர் வைத்ததாக தகவல் கிடைத்தது. சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.4). மேலும், இது குறித்து அ.சா.3 மணிகண்டன் தனது முதல் விசாரணையில், "**மணி, பெரியசாமி, தர்மர், ஞானவேல், நிவேந்திரன் மற்றும் அந்த கட்சியை சேர்ந்த சிலரும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும்**

**விதமாக, போடி தேவர்சிலை அருகில் எவ்வித அரசு அனுமதியும் இன்றி பிளக்ஸ் பேனரை வைத்து அழகு சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளார்கள் என முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 பதிவு செய்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.5). எனவே, போடி தேவர்சிலை அருகே எதிரிகள் அரசின் அனுமதி இன்றி அவர்களது கட்சியின் தலைவரின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக பேனர் வைத்திருந்ததாகவும், அதனால் நகரின் அழகு சீர்குலைந்ததாகவும், அதனால், எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

10.6). மேலும், இது குறித்து அ.சா.1 வீரமுத்து தனது குறுக்கு விசாரணையில், "**இந்த வழக்கு தொடர்பாக தேவர் சிலைக்கு அருகில் எந்த இடத்தில் பேனர் வைக்கப்பட்டுள்ளது என்பதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், தேவர் சிலைக்கு பின்பு இருந்ததாக சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் சொல்லப்பட்ட பேனரை நானோ, சார்பு ஆய்வாளரோ கைப்பற்றினோமா? என்றால், இல்லை. நாங்கள் பேனரை அது எந்த கடையில் அடிக்கப்பட்டது என்ற விபரத்தை பார்த்து தெரிந்து கொண்டோமா? என்றால், இல்லை. அந்த பேனரில் எத்தனை நபர்களின் புகைப்படம் இருந்தது என்பது பற்றியும் விசாரணையில் சொன்னேனா? என்றால், இல்லை. அந்த பேனர் மாற்றப்பட்டிருந்ததா? ஒட்டப்பட்டிருந்ததா? என்பதை எனது போலீசார் விசாரணையில் சொன்னேனா? என்றால், இல்லை**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.7). மேலும், இது குறித்து அ.சா.2 பால்பாண்டியன் தனது குறுக்கு விசாரணையில், "**இந்த வழக்கில் அழகு சீர்குலைவை ஏற்படுத்திய பேனரை நான் கைப்பற்றினேனா? என்றால், இல்லை. மேற்படி பிளக்ஸ் எந்த கடையில் அடித்தார்கள் என்றும், யார் அடித்தார்கள் என்றும் விசாரித்தேனா? என்றால், பிளக்ஸ் அடித்த நபர்களின் பெயர்கள் அதில் இல்லை. நான் பிளக்ஸ்–ஐ கைப்பற்றாததாலும், சம்பவ இடம் குறித்து துல்லியமாக சொல்லாததாலும் காவல்நிலைய புள்ளி**

**விபரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால், சரியல்ல"** என சாட்சியம் அளித்துள்ளார்.

10.8). மேலும், இது குறித்து அ.சா.3 மணிகண்டன் தனது குறுக்கு விசாரணையில், **"மேற்படி இடம் பொதுமக்களுக்கு சொந்தமான இடமா? அல்லது தனியாருக்கு சொந்தமான இடமா? என்றால், பொதுமக்களுக்கு பயன்படும் இடமாக இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால், இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டிருந்ததா? அல்லது நாங்கள் போன பின்னர் வைக்கப்பட்டதா? என்றால், போகும் முன்பே வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பிளக்ஸ்–ஐ யார் மேற்படி இடத்தில் ஊன்றினார்கள் என்று எங்களுடன் வந்த சார்பு ஆய்வாளர் விசாரித்து தெரிந்து கொண்டாரா? என்றால், என் முன்னிலையில் விசாரித்து தெரிந்து கொண்டார். யார் ஊன்றினார்கள் என்றால், சார்பு ஆய்வாளருக்குதான் தெரியும். பிளக்ஸ் எந்த கடையில் அடிக்கப்பட்டிருந்தது என்ற விபரத்தை அந்த பிளக்ஸை பார்த்து தெரிந்து கொண்டேனா? என்றால், மேற்படி பிளக்ஸில் அதற்குண்டான விபரங்கள் இல்லை என்பதால் தெரிந்து கொள்ளவில்லை. அழகு சீர்குலைவை ஏற்படுத்தியதாகச் சொல்லும் பிளக்சை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினாரா? என்றால், கைப்பற்றவில்லை. இந்த பிளக்ஸ் எந்த கடையில் அடிக்கப்பட்டது என்பதை பற்றி சார்பு ஆய்வாளர் தெரிந்து கொண்டாரா? என்றால், தெரியவில்லை"** என சாட்சியம் அளித்துள்ளார்.

10.9). மேலும், இது குறித்து அ.சா.4 அசோக் புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில், **"இந்த வழக்கில் சம்பவ இடம் தேவர்சிலை அருகே எந்த இடத்தில் என குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பேனர் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால், இல்லை. அந்த பேனர் எந்த கடையில், யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விபரமும் வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா? என்றால், இல்லை. பேனர் வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இடம் அரசுக்கு சொந்தமான இடமா?**

**அல்லது தனி நபருக்கு சொந்தமான இடமா? என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை**" என சாட்சியம் அளித்துள்ளார்.

10.10). எனவே, நகரின் அழகை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை எதிரிகள் மேற்கொண்டதாகச் சொல்லியுள்ள நிலையில், மேற்படி பிளக்ஸ் பேனர் தேவர்சிலைக்கு அருகில் எங்கு வைக்கப்பட்டிருந்தது? அல்லது வைக்கப்பட்டிருந்ததா? அல்லது ஒட்டப்பட்டிருந்ததா? அது எந்த கடையில் தயார் செய்யப்பட்டது? அந்த பிளக்ஸ் பேனரில் எந்தெந்த நபர்களின் புகைப்படங்கள் இடம் பெற்று இருந்தது? என்ற எந்த விபரமும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை எனவும், மேலும், அவ்வாறு நகரின் அழகை சீர்குலைத்ததாகச் சொல்லப்படும் பிளக்ஸ் பேனரையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை எனவும் குறிப்பிடும் எதிரிகள் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10.11). மேலும், இது குறித்து அரசுத்தரப்பில் தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டம் 1959 பிரிவு 6-ன் கீழ், அரசு அனுமதியின்றி விளம்பரம் செய்த நபர் தான் அரசின் அனுமதியுடன் தான் மேற்படி விளம்பரம் செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கும் கடமை உள்ளவர் என்றும், எனவே, அரசு அதனை நிரூபிக்க தேவையில்லை என்பதாகவும் குறிப்பிடும் அரசுத்தரப்பு வாதம் ஏற்புடையது என்றாலும்கூட, மேற்படி விளம்பரம் வைக்கப்பட்டது என்ற விபரத்தை நிரூபிக்க அரசுத்தரப்பு தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடை விதி 1959, விதி 3-ல்,

3. Where during investigation into an offence committed under section 3 of the act it is found that objectional advertisement could not be seized and produced into court, a photostat copy or manuscript copy of such objectionable advertisement attested by two respectable persons shall be produced என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த அசல் பிளக்ஸ் பேனரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும்கூட, அதன் புகைப்பட நகலோ, அல்லது அது எவ்வாறு இருந்தது என்பதை வரைந்து கொண்டோ, இரண்டு

மரியாதைக்குரிய நபர்களின் சாட்சி கையப்பத்தோடு அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

10.12). எனவே, பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டது என்ற விபரம் நிரூபிக்கப்படாமல், பிளக்ஸ் பேனர் வைக்க அரசின் அனுமதியை பெற்றதாக எதிரிகள் தரப்புதான் நிரூபிக்க வேண்டும் எனக் குறிப்பிடும் அரசுத்தரப்பு வாதம் ஏற்புடையது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, அரசுத்தரப்பு வழக்கை உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனக் கருதி, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>தீர்வு</u>**

11). முடிவாக, எதிரிகள் மீது 4A(1b) தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் தடைச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12). **<u>கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு</u>**:

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவு இல்லை.

13). **<u>கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழான உத்தரவு</u>**:

எதிரிகளிடமிருந்து கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் இருநபர் ஜாமீனில் பிணையப் பத்திரம் 6 மாத காலத்திற்கு நிலுவையில் இருக்கும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஆகஸ்ட் திங்கள் 04-ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.04 16:29:39 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**<u>1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.வீரமுத்து | முதல்நிலை காவலர் |
| 2. | அ.சா.2 | திரு.பால்பாண்டியன் | முதல்நிலை காவலர் |
| 3. | அ.சா.3 | திரு.மணிகண்டன் | புலன் விசாரணை அதிகாரி |
| 4. | அ.சா.4 | திரு.அசோக் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3 |
| 2. | அ.சா.ஆ.2 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.3 |

**<u>3). அரசுத்தரப்பு சான்றுப்பொருள்</u>**: இல்லை.

**<u>4). எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>: தாக்கல் இல்லை.**

**<u>5). குறிப்பு</u>:**

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையிலிருந்து முன்னிலையானார்கள்.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2026.08.04 16:29:45 +0530

நீதித்துறை நடுவர்,

போடிநாயக்கனூர்.